Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 28 | (14-10-1992) | புதன்கிழமை | ஓசை 239

## வடபகுதி பிரயாணிகள் மீது இராணுவம் கெடுபிடி

வடபகுதியில் இருந்து கொழும்பு வரும் பிரயாணிகள் பயணத்தைத் தொடருவதற்காக வவுனியா சிறிலங்கா இராணுவ முகாமில் அனுமதி எடுப்பதற்கு மணித்தியாலக்கணக்கில் வரிசையில் நிற்கவேண்டிய பரிதாப நிலை கடந்த சில நாட்களாகத் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு செல்வதற்கு வரும் பிரயாணிகளை வவுனியாவில் வைத்து இராணுவத்தினர் மணித்தியாலக் கணக்கில் நிறுத்தி ஒவ்வொருவராக அழைத்துத் தீவிர விசாரணைக்கு உட்படுத்துகின்றனர் என்றும், இதன் பின்னர் பொலிசாரிடம் பயணிகளை அனுமதிபெற அனுப்புகிறார்கள். இதனால் குறித்த நேரத்தில் புகை

(4ஆம் பக்கம் பார்க்க)

# டிச.31 முன் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்குக; தெரிவுக்குழுவிடம் அரசாங்கம் கோரிக்கை

## மூன்று வகை தீர்வுத் திட்டங்கள் பரிசீலனையில்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாக உகந்த தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என அரசு கேட்டிருப்பதாக தெரிய வருகிறது. மேலும் அதற்கேற்றவாறு தெரிவுக்குழுவின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் என தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளிடம் சிறிலங்கா அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மங்கள முனசிங்கா தலைமையிலான இந்த தெரிவுக்குழு முன்னிலையில் இப்போது மூன்று தீர்வு யோசனைகள் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்குக்கும், கிழக்கிற்கும் தனித் தனியான மாகாண சபை, இரண்டும் இணைந்த ஒரு சட்டசபை என்பது ஒரு யோசனை;

முஸ்லிம்களுக்கு சுயாட்சியையும் சிங்களவர்களுக்கு சம அந்தஸ்தையும் வழங்கக்கூடிய தான வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபை என்பது அடுத்த யோசனை.

வடக்கில் உள்ள தமிழ்ப் பகுதிகளையும் கிழக்கில் உள்ள தமிழ்ப்பகுதிகளையும் இணைத்த ஒரே சபை; அதே போன்று வடக்கில் உள்ள முஸ்லிம் பகுதிகளையும் கிழக்கில் உள்ள முஸ்லிம் பகுதிகளையும் இணைத்த ஒரே சபை:

இந்த மூன்று தீர்வு யோசனைகளின் பின்னணியில் மங்கள முனசிங்கா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தனியாகவும் கூட்டாகவும் இணக்கம் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார் என்றும் கூறப்படுகிறது

## முப்படை தளபதிகளுக்கு உதவவே கூட்டுப்படைத் தலைமையாம்

### கூட்டுப்படை தலைமையகம் அறிக்கை

(கொழும்பு)

''நிர்வாகக் கடமையிலும் படையினருக்குப் போதியளவு பயிற்சி அளிக்கவும் கூடுதல் நேரத்தைச் செலவிடுவதற்கு படைத்தளபதிகளுக்கு உதவவும் சிறந்த ஒருங்கிணைப்பை ... களின் தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.''

இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமையகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது ...

... போன்ற கருமங்கள் சம்பந்தப்பட்ட படைத்தளபதிகளின் நேரடி அர்ப்பணிப்புடன் கூட்டுப்படைகளின் தளபதி மற்றும் கூட்டுப்படைகளின் தலைமையகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள் ...

## மரண அபாயத்தை நோக்கி தீவகத்தில் சிக்கியுள்ள மக்கள்

### -படையால் விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''தீவகத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருக்கும் பொதுமக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மரண அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். அங்கு தங்கியிருக்கும் அனைத்து மக்களும் இராணுவப் பிடியில் இருந்து வெளியேறவே விரும்புகின்றனர்.'' இவ்வாறு குடாக்கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தீவகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையாகி வந்த திரு. செல்வெஸ்ரர் என்பவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட இவர் வேலணை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் இவருடன் கைது செய்யப்பட்ட மேலும் ஒருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

தீவகத்தில் தங்கியிருக்கும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு தரமற்றஉலர்உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் தமது சொந்த வீடுகளில் தங்கியிருக்க படையினர் தடைவிதித்துள்ளனர். பாடசாலையிலும், வேறு கட்டடங்களிலும் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாது ஓர் இடத்தில் இருந்து மற்றுமோர் இடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ''குமண'' அடுத்த வாரம் புறப்படும்

யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் ''குமண'' என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு 3200 மெற்றிக்தொன் மா இம்மாத இறுதியில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு 3200 மெற்றிக் தொன் மா இம்மாத பிற்பகுதியில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ் அரச அதிபர் விடுத்த ...

இதனைத் தொடர்ந்து தற்போது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குமாரி கப்பல் பொருள்களை இறக்கும் பணி முடிந்ததும் மன்னார் சென்று அம்மாவட்டத்திற் ...

## வலி-வடக்கு நோயாளர் கப்பலில் யாழ். வந்தனர்

(வடமராட்சி)

அளவெட்டி, இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த ஐந்து நோயாளிகள் ''குமாரி'' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இவர்களைச் செஞ்சிலுவைச் ... கொண்டு சென்றனர்.

தம்பையா கனகராஜன் (இளவாலை), ஜீவரட்ணம் விஜயசிங்கம் (இளவாலை), மரியதாஸ் இராசமணி (இளவாலை), சின்னத்தம்பி விசுவலிங்கம் (அளவெட்டி), விசுவலிங்கம் நாகரட்ணம் (அள ...

மையிலான இந்த தெரிவுக் குழு முன்னிலையில் இப்போது மூன்று தீர்வு யோசனைகள் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்குக்கும், கிழக்கிற்கும் தனித் தனியான மாகாண ஒரு சட்டசபை என்பது ஒரு யோசனை;

முஸ்லிம்களுக்கு சுயாட்சியையும் சிங்களவர்களுக்கு சம அந்தஸ்தையும் வழங்கக்கூடிய தான வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபை என் வடக்கில் உள்ள தமிழ்ப் பகுதிகளையும் கிழக்கில் உள்ள தமிழ்ப்பகுதிகளையும் இணைத்த ஒரே சபை; அதே போன்று வடக்கில் உள்ள முஸ்லிம் பகுதிகளையும் கிழக்கில் உள்ள முஸ்லிம் பகுதிக சபை:

இந்த மூன்று தீர்வு யோசனைகளின் பின்னணியில் மங்கள முனசிங்கா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தனியாகவும் கூட்டாகவும் இணக்கம் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார் என்றும் கூறப்படுகிறது

## "குமண" அடுத்த வாரம் புறப்படும்

யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் "குமண" என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வட

(4 ஆம் பக்கம் பார்க்க)

னரால் கைது செய்யப்பட்டு தீவகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையாகி வந்த திரு. செல்வெஸ்ரர் என்பவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு கைது செய்யப்பட்ட இவர் வேலணை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் இவருடன் கைது செய்யப்பட்ட மேலும் ஒருவர் இவர்கள் தமது சொந்த வீடுகளில் தங்கியிருக்க படையினர் தடைவிதித்துள்ளனர். பாடசாலையிலும், வேறு கட்டடங்களிலும் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாது ஓர் இடத்தில் இருந்து மற்றுமோர் இடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முப்படை தளபதிகளுக்கு உதவவே கூட்டுப்படைத் தலைமையாம்

## கூட்டுப்படை தலைமையகம் அறிக்கை

(கொழும்பு)

''நிர்வாகக் கடமையிலும் படையினருக்குப் போதியளவு பயிற்சி அளிக்கவும் கூடுதல் நேரத்தைச் செலவிடுவதற்கு படைத்தளபதிகளுக்கு உதவவும் சிறந்த ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்குமே வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் கூட்டுப்படைகளின் தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.''

இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமையகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது

இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடுவது அவற்றைச் செயல்படுத்துவது போன்ற கருமங்கள் சம்பந்தப்பட்ட படைத்தளபதிகளின் நேரடி அர்ப்பணிப்புடன் கூட்டுப்படைகளின் தளபதி மற்றும் கூட்டுப்படைகளின் தலைமையகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் என்றும் பத்திரிகைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்டத்திற்கு 3200 மெற்றிக்தொன் மா இம்மாத இறுதியில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு 3200 மெற்றிக் தொன் மா இம்மாத பிற்பகுதியில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ் அரச அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அத்தியாவசிய சேவைகள் நாயகம் இத்தகவலை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தற்போது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குமாரி கப்பல் பொருள்களை இறக்கும் பணி முடிந்ததும் மன்னார் சென்று அம்மாவட்டத்திற்கான உணவுப் பொருள்களை இறக்கிய பின் மீண்டும் திருமலை சென்று மேற்படி நிறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலி-வடக்கு நோயாளர் கப்பலில் யாழ். வந்தனர்

(வடமராட்சி)

அளவெட்டி, இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த ஐந்து நோயாளிகள் ''குமாரி'' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.

இவர்களைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அழைத்து வந்து யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

தம்பையா கனகராஜன் (இளவாலை), ஜீவரட்ணம் விஜயசிங்கம் (இளவாலை), மரியதாஸ் இராசமணி (இளவாலை), சின்னத்தம்பி விசுவலிங்கம் (அளவெட்டி), விசுவலிங்கம் நாகரட்ணம் (அளவெட்டி) ஆகியோரே கப்பலில் வந்தடைந்தவர்கள் ஆவர்.

## திருமலை தமிழ் இளைஞர் வானைக் கண்டால் அச்சம்

(திருக்கோணமலை)

திருமலை நகரில் சிறிலங்கா இராணுவத்தின் வெள்ளை நிற வானைக்கண்டதும் தமிழ் மக்கள் அச்சத்தில் ஒளித்துக் கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது

இந்த வானில் நகரை வலம் வரும் சிறிலங்கா படையினர் கண்களில் தென்படும் அப்பாவி இளைஞர்களை கைது செய்து கடத்துகின்றனராம்,

இவ்வாறு கடத்தப்பட்ட பல இளைஞர்களின் நிலை பற்றி எவராலும் அறிய முடியவில்லை என்றும் கூறப்படுகிறது

திருமலையில் சிறிலங்கா இராணுவத்துடன் துணைநிற்கும் ரெலோ மற்றும் ஈ. பி டி. பி குழுவினர் முக மூடி அணிந்து பல இளைஞர்களை படையினருக்கு அடையாளம் காட்டுகின்றனராம். (தி)

# திருகோணமலை மாவட்டத்தில் துரித சிங்களக் குடியேற்றம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளில் பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இந்நடவடிக்கைகளுக்கு திருமலை அரச செயலகத்தில் பணிபுரியும் சிங்கள அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடித் திட்டம் என்ற போர்வையிலும் பல்லின மக்கள் வீடமைப்புத் திட்டம் என்ற போர்வையிலும் சமீபத்தில் நூற்றுக் கணக்கான சிங்களக் குடும்பங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

1990 ஜூன் மாதம் ஆரம்பித்த யுத்த நடவடிக்கையை அடுத்து திருமலையில் ஏராளமான தமிழ் குடும்பங்கள் சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம் பெயர்ந்து சென்றமை தெரிந்ததே.

இவ்வாறு இடம் பெயர்ந்து சென்ற தமிழ் மக்களின் காணிகள் அனைத்தும் சிறிலங்கா அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு இப்புதிய குடியேற்றம் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன்பிடி திட்டம் என்ற போர்வையில் மீன்பிடி அமைச்சினால் கடற்கரையோர தமிழ் மக்களின் நிலங்களிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குமாரியில் அரிசி ஏற்ற ஒப்பந்தம் செய்தவர் மறைவு

[கொழும்பு]

''குமாரி'' என்ற கப்பலில் அரிசி ஏற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஒப்பந்தக் காரர் தலைமறைவாகியுள்ளார். இவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் இறங்கியுள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பில் இருந்து வடபகுதி நோக்கிப் புறப்பட்ட இக்கப்பல் மூலம் வட பகுதிக்குத் தேவையான சுமார் 1000 மெற்றிக் தொன் அரிசியை வழங்குவதற்கும் அவ் அரிசியை கப்பலில் ஏற்றுவதற்கும் ஒப்பந்தக்காரர் ஒருவரை கொழும்பு அத்தியாவசிய சேவைகள் நாயகம் நியமித்தார் இதற்கான பணமும் அவருக்கு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் கொழும்புத் துறைமுகத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளை பேண அரசுக்குபுதிய ஆலோசனை

### ஐ. நா. பிரதிநிதிகள் வழங்குவர்

(மட்டக்களப்பு)

உலகெங்கும் இப்போது மாற்றமடைந்து கொண்டு வரும் நீதிநிர்வாக முறைகளுக்கு ஏற்ப இலங்கையிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும். இதனையிட்டு இலங்கை அரசுக்கு ஆலோசனை தெரிவிக்க இருக்கின்றோம் என கடந்த வெள்ளியன்று மட்டக்களப்புக்கு வருகை தந்த ஐ நா. மனித உரிமைகள் குழு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்காகவே இலங்கை வந்திருக்கிறோம் என்றும், இலங்கை அரசுக்கு கடந்த வருடத்தை விட மேலும் பலசிபார்சுகளை தெரிவிக்க இருக்கின்றோம் என்றும் மனித உரிமைகள்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இக் குழுவினர் மட்டக்களப்பு சிறைச்சாலை முகாமுக்கும், அம்பாறை, தம்பிலுவில். திருக்கோவில் ஆகிய பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

## மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு நாளை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 5 00 மணிவரை யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெறும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் தெரிவித்துள்ளனர்

## வலி வடக்குப் பகுதியில் சட்டி பானைகள் முதல் அனைத்தும் படையால் சூறை

(யாழ்ப்பாணம்)

''சட்டி, பானை முதல் கூரைத்தகடுகள் வரை வலி, வடக்கில் உள்ள பொது மக்களின் அனைத்துப் பொருள்களும் சிறிலங்காப்படையினரால் சூறையாடப்பட்டிருக்கின்றன.'' இவ்வாறு வலி வடக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பகுதியில் சிக்கியிருந்த ஐந்து பேர் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் யாழ். நகர் திரும்பினர்,

இவர்களில் ஒருவர் மேற்படி பகுதிகளின் தற்போதைய நிலை குறித்து மேலும் தெரிவிக்கையில்; அனைத்து பொது மக்களின் வீடுகளும் படையினரால் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 கட்ட நிவாரணம் மட்டும் இம்மாதம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ். மாவட்டத்தில் இடப்பெயர்ந்துள்ள மக்களுக்கு இம்மாதம் மூன்று கட்ட நிவாரணமே வழங்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசின் பணிப்பிற்கிணங்க கடந்த சில மாதங்களாக இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது மீண்டும் நாளை முதல் உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் சகல அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளை இடம்பெயர்ந்தோருக்கு இம்மாதம் ஏற்கனவே ஒரு கட்ட நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நாளை 15 ஆம் திகதி முதல் மேலும் இரண்டு கட்ட நிவாரணம் மட்டுமே வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அரச அதிபர் அடுத்த மாதம் முதல் நாலு கட்ட நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். [பா]

## உன்னிச்சை தமிழரின் சொத்துக்கள் சூறை

மட்டக்களப்பு மாவட்டத்தில்உள்ள உன்னிச்சைப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்களிடமிருந்து சிங்களக் காடையர்கள் சொத்துக்களைச் சூறையாடியுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி மேற்படி பகுதியில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்குள் சிங்களக் காடையரால்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# அகதிகளை திருப்பி அனுப்ப பிரிட்டன், அவுஸ். முயற்சி

பிரித்தானியாவிலுள்ள வன்னிப் பிரதேச தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை உண்டா என்பதைக் கண்டறிய பிரித்தானியபாராளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகாரத் திணைக்களத்தில் தென்னாசிய விவகாரத் துணை அமைச்சருமான மார்க் லென்னாக்ஸ் போயிட் நாளை வியாழக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் எதிர்வரும் 17 ஆம் திகதி வவுனியாவிற்கு வருகின்றார் என்றும், இவரும் அவுஸ்திரேலியாவிலுள்ள அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு உரிய சூழ்நிலை வவுனியாவில் இருக்கின்றதா என்பதைக் கண்டறியவே வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

**கானகம் செழித்தால் - இவ் வானகம் பொழியும்**

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### துரித மீட்டற்பயிற்சி

துரித மீட்டற்பயிற்சி (ஆண்டு 5 புலமைப் பரிசில் வெளிவந்து விட்டது) புதிய கல்வி நிலையத்தால் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சி (15 வினாத்தாள்கள் விடைகளுடன்) ஆண்டு 6 அநுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3452)

### தரன் ஸ்ரூடியோ

குறைந்த சலார் - குறித்த நேரப்-தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92, 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

### காணவில்லை

சிவப்பு நிறம் உடைய பசு ஒன்று 12-10-1992 இல் இருந்து காணாமல் போய்விட்டது. கழுத்தில் கயிற்றுடன் காணப்படும். இதைக்கண்டவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் விலாசத்துக்கு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும். சுவை பருவி, மின்சார வீதி, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (3361)

### கால்நடை மருந்தின்றி அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

நோயினால் பாதிக்கப்பட்ட ஆடு, மாடு பசுக்களுக்கு கால்நடை வைத்திய அதிகாரிகள் பரிசோதித்து எழுதிக் கொடுக்கும் மருந்து வகைகளை இப்பிரதேசத்திலுள்ள தனியார் மருந்துச்சாலைகளில் பெற முடியாது இருப்பதாகப் பொதுமக்கள் புகார் தெரி…

# ஐ. நா. மனித உரிமைக் குழுவின் சிபார்சுகள் அரசால் புறக்கணிப்பு

மனித உரிமைகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பதினான்கு சிபார்சுகளையும் அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என இலங்கை வந்துள்ள மனித உரிமைகள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வருடம் மனித உரிமைகள் குழு இங்கு விஜயம் செய்த சமயம் அரசுக்கு 14 சிபார்சுகளை சமர்ப்பித்திருந்தது என்றும், ஆனால் இவற்றை அரசு நிறைவேற்றவில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

அவசரகால சட்டத்தின் 17 ஆம் 18 ஆம் ஷரம் மிகவும் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டுள்ளது இதன் மூலம் எந்தவித ஆணையுமின்றி உடனடியாக எவரையும் கைது செய்ய முடியும் கைதானோரை எந்தவொரு கால எல்லையுமின்றி தடுத்து வைக்கமுடியும் இச் சட்டம் அமுலில் இருக்கும் வரை அரசோ அல்லது படைகளோ தாங்கள் நினைக்கின்ற நேரத்தில் எவரையும் கைது செய்து தடுத்து வைக்க முடியும் என்றும் ஆகவே அரசு அவசர காலச் சட்டத்தை நீக்க ஐ நா மனித உரிமைகள்குழு முயற்சி எடுக்கவேண்டும் எனவும்கூறப்பட்டுள்ளது

மேலும் மனித உரிமைகளை மீறுகின்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கு பதவி உயர்வோ அல்லது சலுகைகளோ வழங்கப்படக் கூடாது அதுவும் சிறிலங்கா அரசால் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்றும்,

5-9-90 இல் மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிமுகாமில் சுமார் 40,000 பேருக்குமுன்னிலையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைதான 152 தமிழ் இளைஞர்கள் பற்றி இதுவரை விவரம் தெரிவிக்கவில்லை என்றும்,

இச் சம்பவத்திற்கு சாட்சிகள் ஏராளமாக இருப்பதனால் இதுபற்றி விவசாரிக்க ஒரு ஆணைக்குழு நியமிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்ளும்படியும் மனித உரிமைகள் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

### தற்காலிக எழுதுவினைஞர் நியமனம்

யாழ் மாவட்ட தபால் திணைக்களத்தில் கடந்த முதலாம் திகதி முதல் இருபத்தொரு பேருக்குத் தற்காலிக எழுதுவினைஞர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஒருநாள் அறிமுகக் கருத்தரங்கும் வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது

இக்கருத்தரங்கில் அஞ்சல் அலுவலக கணக்கியல் காரியாலய நடைமுறைகள். பிற திணைக்களங்களுடன் கொடுப்பனவுகள், காசுப் பதிவேடு பராமரித்தல் போன்ற விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (42)

# பட்டினிச்சாவின் விளிம்பில் ஆலையடிவேம்பு மக்கள்

(கொழும்புத்துறை)

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றுவரை எதுவித நிவாரணஉதவிகளும் வழங்கப்படவில்லைஎன அங்கிருந்து கிடைத்த தகவல் மூலம் தெரியவந்துள்ளது

இப்பகுதியில் உள்ள சுமார் 300 கூலித்தொழிலாளர்கள் எதுவித தொழிலும் இன்றி பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்

இங்கு சுமார் 1500 ஏக்கர் நெற்செய்கை நிலம் செய்கை பண்ணப்படாதுள்ளது.

இப் பகுதியில் சுமார் 120 குடும்பங்கள் அகதி முகாமில் தஞ்சம் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது 250 பிள்ளைகள் பெற்றோரை இழந்து அனாதைகளாக உள்ளனர். இவர்களுக்குஎதுவித நிவாரணமோ உதவிகளோ இன்றுவரை கிடைக்கவில்லை எனவும். ஏனைய அடிப்படை வசதிகளிலும் தமிழ்ப்பகுதி கூடுதலாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் 500 மீனவர் குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி கடலுக்கு இராணுவ நடவடிக்கையால்செல்ல முடியாது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல் மூலம் தெரியவந்துள்ளது. (24)

# படையினரை கௌரவிக்கும் நிகழ்ச்சிகள் இல்லை

(கொழும்பு)

சிறிலங்காப் போரில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த சிறிலங்கா படையினருக்கு உதவுமுகமாகவும் சிறிலங்கா இராணுவத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாகவும் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும் கடந்த ஆண்டைப் போல் இறந்த அல்லது காயமடைந்தபடையினரை கௌரவிக்கும் நிகழ்ச்சி எதற்கும் இந்த ஆண்டில் திட்டமிடப்பட வில்லை கடந்த ஆண்டு போரினால் இறந்த அல்லது காயமடைந்த காயமடைந்த பல படையினர் சிறிலங்கா அரசினால் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது தெரிந்ததே.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய பின்னர் சிறிலங்கா ஆயுதப் படையினரில் 8210 பேர் ஊனமடைந்துள்ளனர் எனவும் இவர்களில் 7968 பேர் இராணுவத்தினர்எனவும் 242 பேர் விமானப்படையினரும் ஏனையோர் கடற்படையைச் சேர்ந்தோர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# விசாரணைக்கு சமுகமளிக்க இரா. அதிகாரிக்கு அழைப்பு

(கொழும்பு)

பத்தொன்பது வயதுடைய பாலநாதன் யசீதரன் என்பவர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைக்கு அக்டோபர் 19இல் சமுகமளிக்கும்படி அப்பீல் நீதிமன்றம் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் வேறு இரு பொறுப்பதிகாரிகளுக்கும் கட்டளை பிறப்பித்துள்ளது.

இம் மனுவின்படி யசீதரன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் படை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு எந்த நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது.

நெஞ்சுவலி காரணமாக திருக்கோணமலை வைத்திய சாலையில் சிகிச்சைபெறச் சென்ற சமயம் அவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார் என்றுஅவரதுதந்தை தெரிவித்தார்.

# திணைக்களங்களில் மழைநீர் ஊழியர்கள் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள அரசகாரியாலயங்கள், திணைக்களங்கள் அனைத்திலும் மழை நீர் உட்செல்வதால் ஊழியர்களினால் பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை பிரதேச வைத்திய சாலை உட்பட ஏனைய அனைத்துக் கட்டடங்களிலும் பாடசாலைகளிலும் மழைநீர் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்துள்ள கட்டடங்களைப் புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினாலும் ஓடு மற்றும் சீற், சீமெந்து போன்ற பொருள்கள் இப்பகுதிநோக்கி அனுப்பி வைப்பதில் இராணுவம் அனுமதி மறுத்திருப்பதினாலும் பொது ஸ்தாபனங்களினால் கூட புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது

# வைத்திய நிபுணர்களுக்கு பெரும் பற்றாக்குறை

**— சுகாதார அமைச்சர்**

(கொழும்பு)

இலங்கையில் துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் 350 பேர்களே சேவையில் உள்ளார்கள், துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் மேலும் ஆயிரம் பேர் தேவைப்படுவதாக சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் கூறினார்

பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாகிஸ்தானிலிருந்து பத்து வைத்தியர்கள் வரவிருப்பதாகவும், அவர்களுக்கு சம்பளத்தை பாகிஸ்தான் அரசே வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# பெண்களுக்கு வேலைவழங்க தோட்டத்துரைமார் தயக்கம்

(தெரணியகலை)

கப்பட்டுவந்தது ஆனால் இந்த…


யா / நல்லூர்
இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின்
(மங்கையற்கரசி)
நிதி உதவிக்காக
இக்கல்லூரி பழைய மாணவர்களால் நடத்தப்படும்

★ கலைவிழா ★

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்; 17-10-1992 சனி மாலை 5 மணி


## அறிவித்தல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

எமது நிர்வாக சபை ஏகமனதாக தலைவர் எஸ். சிவபாதம் அவர்களை (சர்மிளா பார்மசி) 1992-10-10 லிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதை சகல அங்கத்தவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாக சபை உறுப்பினர்

(3348)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
01 | 08 | 1946



அரக்கன் அழிப்பு
14 | 10 | 1988

### குழந்தைவேலு பிரமானந்தம் (மாமணி)

வண்ணமணி விளக்கே
வல்வை மணற்குன்றே
உண்ணக் கொடுத்ததனால்
உயிர் கொடுத்த உத்தமனே
கண்ணை இழந்து விட்டோம்
கண்ணீரில் நீந்துகின்றோம்
மண்மீட்க விண் சென்றாய்
மாமணியே போற்றுகின்றோம்.

...ழுக்குறிப்பிடப்படும் விலாசத்
துக்கு அறியத்தரவும். சன்மா
னம் வழங்கப்படும். சுவை
அருவி, மின்சார வீதி, பஸ்
நிலையம் யாழ்ப்பாணம்.
(3361)

## கால்நடை மருந்தின்றி அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கால் நடைகளுக்கான மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

நோயினால் பாதிக்கப்பட்ட ஆடு, மாடு பசுக்களுக்கு கால் நடை வைத்திய அதிகாரிகள் பரிசோதித்து எழுதிக் கொடுக்கும் மருந்து வகைகளை இப் பிரதேசத்திலுள்ள தனியார் மருந்துச்சாலைகளில் பெற முடியாது இருப்பதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதனால் நோய்வாய்ப்பட்ட கால் நடைகளுக்கு சிகிச்சையளிக்க முடியாது, இறந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(42)

## திருட்டு

வல்லிபுரம் ஆழ்வார் ஆலய உற்சவ காலத்தை ஒட்டி தற்காலிகமாக நிறுவப்பட்ட குளிர்களி நிறுவனம் ஒன்றில் கடந்த 10-ம் திகதி சனிக்கிழமை இரவு திருட்டு நடைபெற்றுள்ளது.

ஆலயத்தில் தற்காலிகமாக இயங்கிய பிரதேசச் செயலகத்தில் முறைப்பாடு கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை காவல்துறை பணிமனையில் மேற்படி புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(21)

## திணைக்களங்களில் மழைநீர் ஊழியர்கள் அவதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள அரசகாரியாலயங்கள், திணைக்களங்கள் அனைத்திலும் மழை நீர் உட்செல்வதால் ஊழியர்களினால் பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை பிரதேச வைத்திய சாலை உட்பட ஏனைய அனைத்துக் கட்டடங்களிலும் பாடசாலைகளிலும் மழைநீர் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்துள்ள கட்டடங்களைப் புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினாலும் ஓடு மற்றும் சீற், சீமெந்து போன்ற பொருள்கள் ஏ டபகுதிநோக்கி அனுப்பி வைப்பதில் இராணுவம் அனுமதி மறுத்திருப்பதினாலும் பொது ஸ்தாபனங்களினால் கூட புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது

## பெண்களுக்கு வேலைவழங்க தோட்டத்துரைமார் தயக்கம்

(தெரணியகலை)

புதிதாக மணமுடித்து கணவன் தொழில் புரியும் தோட்டத்தில் குடியேறும் பெண்களுக்கு தொழில்வழங்க தோட்டத்துரைமார் தயக்கம்காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்பு எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் தோட்டத்தில் குடியேறியவுடன் இந்தப் பெண்களுக்கு தொழில் வழங்கப்பட்டுவந்தது ஆனால் இந்த நடைமுறை தோட்ட நிர்வாகங்களை கம்பனிகள் பொறுப்பேற்றபின்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

இந்தப் புதியமுறை அமுலில் இருப்பதால் தொழிலுக்காக பல மாதங்கள் இந்தப் பெண்கள் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## வழக்கு ஒன்றின் சாட்சி திரும்பும் வழியில் கொலை

உடுகம மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு ஒன்றின் சாட்சியான காமினிடயஸ் (வயது - 26) என்ற இளைஞர் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் நீதிமன்றத்திலிருந்து திரும்பும் வழியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகவும், இது தொடர்பாக உடுகம பொலிசார் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.


யாழ். நகரில் ஒரு புதிய புடைவை மாளிகை

"எழினி"

இன்று புதன் காலை 9 மணிமுதல் ஆரம்பம்

★ கண்ணைக்கவரும் வர்ணத்தில் அமைந்த சிறந்தரகச் சேலைகள் துணிவகைகள்
★ ஆடவர்களுக்கான சேர்ட்டிங், சூட்டிங்.
★ நவீன டிசையின்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்
★ சிறுவர் குழந்தைகளுக்கான ஆடைகள்

இன்னும் பல

சிறந்தரகம்! குறைந்தவிலை!! நிறைந்தசேவை!!!

உங்கள் தீபாவளிப் பண்டிகையை எழினியுடன் பகிர்ந்து கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்

பெரியகடை, யாழ்ப்பாணம். (சி5220)


...வைத்திய நிபுணர்கள் 350 பேர்களே சேவையில் உள்ளார்கள். துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் மேலும் ஆயிரம் பேர் தேவைப்படுவதாக சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் கூறினார்

...லேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாகிஸ்தானிலிருந்து பத்து வைத்தியர்கள் வரவிருப்பதாகவும், அவர்களுக்கு சம்பளத்தை பாகிஸ்தான் அரசே வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.


யா / நல்லூர்
இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின்
(மங்கையற்கரசி)
நிதி உதவிக்காக
இக்கல்லூரி பழைய மாணவர்களால் நடத்தப்படும்

★ கலைவிழா ★

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்; 17-10-1992 சனி மாலை 5 மணி

★ இசைக்கச்சேரி ★

திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
செல்வி கு. நாகராஜ ஐயர்
இலங்கைவேந்தனின்

★ கதகளி பரத நாட்டியம் ★

புலவர் முத்துராசரெத்தினத்தின்
இலங்கைவேந்தன், எல்லாளன், கந்தரோடை இளவரசி, குளக்கோட்டன், ஜயவீரசிங்கையாரியன் (யாழ்ப்பாண மன்னன்), ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கன், சங்கிலியன், கண்டியரசன் முதலிய ஈழத்து வரலாற்று நாடக வரிசையில்

"பண்டார வன்னியன்"



பண்டாரவன்னியனாக இலங்கைவேந்தனின் தோற்றம்

தலைவர்
திருமதி ச. காங்கேயன்

காரியதரிசிகள்
திருமதி அ. தம்பையா,
திரு. கு சிவகுமார்

அன்பளிப்பு;
சகல விதமான ஆங்கில மருந்து வகைகளுக்கும்
பால்மா உணவுப் பொருட்களுக்கும் இன்றே நாடுங்கள்

ஆர். வீ. ஜீ. மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (3462)


...
08
|
1946



...
10
|
1988

## குழந்தைவேலு பிரமானந்தம் (மாமணி)

வண்ணமணி விளக்கே
வல்வை மணற்குன்றே
உன்னைக் கொடுத்ததனால்
உயிர் கொடுத்த உத்தமனே
கண்ணை இழந்து விட்டோம்
கண்ணீரில் நீந்துகின்றோம்
மண்மீட்க விண் சென்றாய்
மாமணியே போற்றுகின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

இப்படிக்கு
தம்பிமார்

(3454)

## நினைவு கூருகின்றோம்... 1992-10-14

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - அரியாலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய -
செல்வம் [தியாகராஜா பிரகலாதன் - வீடமைப்புத் திட்டம், நாவற்குழி - யாழ் ]

கோப்பாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
லெப் இளங்கோ [மார்க்கண்டு சோதிலிங்கம் - ஆயிலை, காரைநகர் - யாழ் ]

கோப்பாய், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4-தமிழர்கள்

1988ஆம் ஆண்டு யாழ். வெலிங்டன் சந்தியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட -
நாட்டுப்பற்றாளரான -
வி. கதிர்காமநாதன் [கல்லூரி வீதி யாழ்ப்பாணம்]

சுன்னாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளரான -
கஜன் [பொன்னையா சிறிதரன் - உடுவில் கிழக்கு, சுன்னாகம் - யாழ்.]

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளால் காணாமல் போன இளைஞன் உட்பட நொச்சிமுனைக் குடியிருப்பைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (பூநகரி - கீரிக்குடா) சென்று கொண்டிருந்த படகு மீது உலங்கு வானூர்தியிலிருந்து சிறிலங்காபடையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பயணி.

திருநெல்வேலிப் பொதுச்சந்தை, உடுப்பிட்டிச்சந்தி ஆகிய பகுதிகளின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட பெண் உட்பட 5 - தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப்புலிகள்

(இ-5221)

சிந்தனைக்கு

சிறப்பைத் தேடுபவன், சிறப்பை மறந்து விட்டு வாய்மையைத் தேடட்டும். அப்பொழுது அவனுக்கு இரண்டுமே கிட்டும்.

— ஹோரஸ் மன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 14-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025- 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## விசுவாசமா? அக்கறையீனமா?

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை துறைமுகம் வந்து சேர்ந்த 'குமாரி' கப்பலிலும் வழமையைப் போல் குறைந்தளவு மருந்து வகைகளே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை என்பனவற்றில் எந்தளவிற்குச் சிறிலங்கா அரசாங்கம் தீவிரமான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்ததோ அதேபோன்று மருந்துப் பொருள்களிலும் தீவிரமாக கடைப்பிடித்தது.

இதன் காரணமாக சில மருந்து வகைகளுக்கு முற்றாகத் தடை ஏற்பட்டது. சில மருந்து வகைகளின் விநியோக அளவைக் குறைத்ததோடு, கட்டுப்பாடுகளும் விதித்தது. இதன் காரணமாக வடக்கிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள், தனியார்வைத்தியசாலைகள், மருந்தகங்கள் என்பன உட்பட எங்கும் மருந்துத் தட்டுப்பாடு என்பது நிரந்தர அம்சமாக மாறியது.

இதன் காரணமாக சிறிலங்கா அரசின் இலவச சுகாதார சேவை என்பது கேள்விக்குறியதாகியுள்ளது. ஏனெனில் அரச ஆஸ்பத்திரிகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரும்பாலான மருந்துகளை தனியார் கடைகளில் கொள்வனவு செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இதேவேளை தனியார் கடைகளில் மருந்துகளின் விலைகள் மிக உயர்வானதாக ஏழை மக்களினால் எட்ட முடியாத நிலை உருவாகியது.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையும், மருந்துப் பொருள்களின் மீதான கட்டுப்பாடும் சேர்ந்து மக்களைப் பெருமளவு பாதித்துள்ளது. போசாக்கின்மை அதிகரிப்பு, நோயால் பாதிக்கப்படுவோரின் தொகையில் அதிகரிப்பு போன்றவற்றால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலை உருவாகி தமிழர் சமுதாயம் துன்பப்பட வேண்டுமென்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் விருப்பமாகும். தமிழர் தேசிய இனப் போராட்டத்தை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ளுதல் சாத்தியப்படாது என்பதனால் தமிழ்மக்களை உடல் ரீதியாகவும், மனோவியல்

### பெருந் தோட்டங்களில் தனியார் நிர்வாகம்

# தொழிலாளர்கள் மீது பெரும் கெடுபிடி; மலையக நிலைமை கட்டுக்குலையலாம்!

கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக கொழுந்து பறிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள செல்லமுத்து நவமணி மூன்று குழந்தைகளுக்கு தாயானவர். தனது சேவைக் காலத்தின் பெரும்பகுதியில் அரசாங்க சார்புடையதும், அமைச்சர் தொண்டமானால் வழிநடத்தப்படுவதுமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்து வந்தவர்.

பதினைந்துஆண்டுகள் தமது தொழிலை ஒரு குழந்தையைப் போல நேசித்து வந்த அவர் தற்போது அதில் வெறுப்புக் கொண்டவராகியுள்ளார் எந்த நேரமும் தனது வேலை பறிக்கப்பட்டு விடலாமோ என்ற அச்சம் அவரிடம் குடிகொண்டுள்ளது. இம்முறை தனது தொழிற் சங்கம் தனக்கு பாதுகாப்பு அளிக்க முன்வராது என்றும், இந்தப் பிரச்சினைக்கு அத் தொழிற்சங்கமும் உடந்தையாகியுள்ளது என்றும் அவர் நம்புகின்றார்.

நவமணியின் பிரச்சினைகள் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பெருந்தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்புக்களை சர்ச்சைக்குரிய வகையில் தனியார் கம்பனிகள் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து ஆரம்பமாகின. வேலைப்பளு நாளாந்தம் அதிகரித்து வரும் அதே சமயம் வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த ஊதிய அடிப்படையிலேயே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இதனால் வேலை நாட் குறைப்பு என்பது அடிப்படையில் சம்பளக் குறைப்பு ஆகிறது அத்துடன் முன்பு தொழிலாளர்கள் தமது பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்துடன் நேரில் சென்று பேசும் வாய்ப்பு இருந்தது ஆனால் தனியார் கம்பனிகள் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் அந்த வாய்ப்பும் இல்லாது போய் விட்டது. மேலதிக வேலையில் ஈடுபடுவதற்கு எமக்கு நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படும் அதே வேளை, மேலதிக கொடுப்பனவு எதுவுமில்லை. இது வருந்தத்தக்கதாகும். முன்பிருந்த நிலையில் என்றால் தொழிற்சங்கமாவது பாதுகாப்பிற்காக ஓடிவரும். இப்போது அவர்கள் தம்மைத் தனிமைப் படுத்திக் கொண்டு விட்டதால் நாம் உதவியற்றவர்களாக்கப்பட்டுள்ளோம். இவ்வாறு திருமதி நவமணி தற்போதைய மலையக நிலைமைகள் பற்றி விபரித்துள்ளார்.

இது திருமதி நவமணிக்கு மட்டுமே உரிய பிரச்சினைகள் அல்ல சாதாரணமாக பெருந்தோட்ட நிர்வாகங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டதன் விளைவாக மலை முகடுகளின் எல்லாம் எதிரொலிக்கும் பிரச்சினைதான். அதில் ஒருவகை மாதிரிதான் திருமதி நவமணி.

இன்னும் மஸ்கெலியா பகுதியில் ஒரு தோட்டத் தொழிலாளியான பெரியமனம் சிவகுமாரன், பூண்டுலோயா பகுதியின் தேயிலைத் தொழிற்சாலை ஊழியரான பெருமாள் சத்தியசீலன் போன்ற பலரும் கூட இதே மாதிரியான உணர்வுகளையே எதிரொலிக்கின்றார்கள்.

வேலை நாட் குறைப்பு மட்டுமன்றி மருத்துவம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளில் கணிசமான அளவை தனியார் நிர்வாகங்கள் வெட்டிக் குறைத்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர். தனியார் நிர்வாகங்கள் எதுவும் எமது குரலுக்கு செவி சாய்க்காமல் இருக்கும் அதே சமயம், வேலையில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் எந்த எதிர்ப்புக் காட்டாமல் தொடர்ந்து தங்களுடன் வரவேண்டும் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

வேலைக்கு செல்வதில் ஒரு நிமிடம் தாமதம் ஏற்பட்டாலும் கூட வேலை மறுக்கப்படுகிறது அதாவது சம்பளம் வெட்டப்படுகிறது. தொழிற் சங்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் தமது இழந்து போன உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராடுவதற்கு அவர்கள் தயாராகியுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே அடிமட்டத்தில், கடமையாற்றும்தொழிற் சங்கவாதிகள், அரசியல் ஆய்வாளர்கள் வகை மாதிரிக்கு மூன்று தொழிலாளர்களிடம் செவ்வி கண்டபோதும் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இத்தகைய உணர்வுகள் பரவியிருப்பதை எதிரொலிக்கின்றார்கள் ஆயிரம் ஆயிரம் பேர் இத்தகைய உணர்வுகளுக்குஉட்பட்டிருப்பதோடு இத்தகைய உணர்வுகள் மேலும் வேகமாகப் பரவி வருவதையும் உணர முடிவதாக கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிலைமை இதே போக்கில் நீடிக்குமானால் விரைவில் மலையகத்தில் நிலைமை கட்டுக் குலைவதுடன் பெரும் அளவிலான மக்கள் போராட்டம் வெடிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் பெருந்தோட்டங்களை தனியார்களிடம் ஒப்படைக்க எடுத்த முடிவுதான் இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் என்று தொழிற்சங்கவாதிகள் பலரும் கருத்து வெளியிடுகின்றனர். இ. தொ. கா என்னும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எல். ஜே ஈ டபிள்யூ. என்னும் ஜாதிக தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பன மிகக் குறுகிய கண்ணோட்டத்துடன் அரசாங்கத்துடன் இசைந்து போய்விட்டதாக பெருமளவிலான தொழிற் சங்கவாதிகள் கூறுகிறார்கள். மடைமைத் தனமான இந்த முடிவை மேற்கொண்டதின் மூலம் இ. தொ காவும் எல். ஜே ஈ டபிள்யூ வும் தமக்குத் துரோகம் செய்து விட்டதாக தோட்டத் தொழிலாளர்களில் பலரும் கருதுகின்றனர்.

1972ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கம்பனிகளினதும், பெரும் முதலாளிகளினதும் பொறுப்பிலிருந்த பெருந் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவது என்ற பெயரில் அரசுடைமையாக்கப்பட்டபோது எழுந்த நெருக்கடியைப் போல இன்றும் அதைவிட மோசமான தொரு நிலையே தற்போது மலையகத்தில் ஏற்பட்டிருக்கிறது. தனியார் கம்பனிகளுக்கும், அரசுக்கும், இ தொ கா. வுக்கும் இடையே மூடப்பட்ட அறைகளில் நடந்த இரகசியப் பேச்சுக்களின் விளைவாக தோட்டத் தொழிலாளரின் சாதாரண வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது தற்போது தோட்டங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் தனியார் கம்பனிகளில் 55 சத விகிதமானவை இந்தியர்களுக்குச் சொந்தமானவை. அரசாங்கம் இத்தனியார் கம்பனிகளில் வெளிநாட்டுக்கரங்கள் கிடையாதுஎன்று எவ்வளவுதான்கூறினாலும் அது உண்மையல்ல ஏஜெண்டுகளாகச் செயற்படும் உள்ளூர் கம்பனிகளின் உதவியுடன் இது கச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றது இதனால்97 சதவிகிதமானதொழிலாளர்கள் உண்மையில் எந்தக்கம்பனிக்காக தாம் உழைக்கிறோம்என்பதைக் கூட அறிய முடியாதவர்களாகியுள்ளனர் இவ்வாறு தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கச் செயலாளர் ஏ. இராமையா கூறுகின்றார்.

தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்படுவதற்காக நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது பெருமளவு வாக்குறுதிகளை அள்ளி வீசிய கம்பனி நிர்வாகங்களால் இ.தொ.கா ஏமாற்றப்பட்டு விட்டது இ. தொ.காவிற்கு இலகுவாக மடைப்பட்டம் கட்டிவிட அவர்களால் முடிந்துள்ளது என்று தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி. வி. கந்தையா குறிப்பிடுகின்றார். தோட்டங்களின் நிர்வாகம் மட்டுமே தனியார் கம்பனிகளிடம் கொடுக்கப்படும் லயன் அறைகளில் குடியிருக்கும் தொழிலாளரின் நலவாழ்வுகளில் அவை தலையிடாது என்று கூறப்பட்டதும் வெறும் உறுதி மொழியாகவே இருந்து விடுமோ என்ற அச்சம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது இத்தகைய போக்கின் விளைவாக இ.தொ.கா தனது அடிமட்ட ஆதரவை வெகுவேகமாக இழந்து வருகிறது என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

அத்துடன் உணர்ச்சி பூர்வமான வகையில் பிரச்சினைகள் ஏற்படும் போது தொழிற் சங்க வேறுபாடுகளுக்கு அப்பால் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து வேலை நிறுத்தம் செய்யும் போக்கு இன்று அதிகரித்து வருகின்றது இத்தகைய வேலை நிறுத்தங்கள் பற்றிய முன்னறிவிப்பு எதுவும்தொழிற்சங்கதலைமைக்கு கூட கிடைப்பதில்லை தமது பிரச்சினைகளுக்காக ஒன்றுபட்டு போராட முனையும் இத்தகைய போக்கு தீவிரமாக வளர்ந்து வருகின்றது. இது நீடிக்குமானால் தொழிற் சங்கங்கள் கூட தொழிலாளர்கள் மீதான தமது கட்டுப்பாட்டை இழக்க நேரிடலாம் என்றும் அவர் தெளிவுபடுத்துகின்றார், இ தொ. காவின் தலைமை தோட்டங்களைதனியார் கம்பனிகளிடம் கொடுக்கும் விடயத்தில் நடந்து கொண்ட விதம் இ தொ காவின் அலுவலக நிர்வாகிகள் முதல், தொண்டர்கள் வரை பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் திரு. கந்தையா தெளிவுபடுத்துகிறார்.

எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் மட்டுமல்ல எல். ஜே. ஈ. டபிள்யூவின் உதவிப் பொதுச் செயலாளரான வீ. புத்திரசிகாமணி போன்றோர் கூட தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் விடப்பட்டதை வன்மையாக எதிர்க்கின்றார்கள்.

இன்றைய நிலைமையானது மலையக இளைஞர்கள் மத்தியில் வெறுப்பையும், விரக்தியையும் தூண்டி வளர்க்க ஏதுவாக இருப்பதாகவும், இதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்குமெனவும் எச்சரிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. நன்றி: ஜலண்ட்

நிலவும் மருந்துப் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரும்பாலான மருந்துகளை தனியார் கடைகளில் கொள்வனவு செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இதேவேளை தனியார் கடைகளில் மருந்துகளின் விலைகள் மிக உயர்வானதாக ஏழை மக்களினால் எட்ட முடியாத நிலை உருவாகியது.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையும், மருந்துப் பொருள்களின் மீதான கட்டுப்பாடும் சேர்ந்து மக்களைப் பெருமளவு பாதித்துள்ளது. போசாக்கின்மை அதிகரிப்பு, நோயால் பாதிக்கப்படுவோரின் தொகையில் அதிகரிப்பு போன்றவற்றால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலை உருவாகி தமிழர் சமுதாயம் துன்பப்பட வேண்டுமென்பதே சிறிலங்கா அரசாங்கத்தின் விருப்பமாகும். தமிழர் தேசிய இனப் போராட்டத்தை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ளுதல் சாத்தியப்படாது என்பதனால் தமிழ்மக்களை உடல் ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் பலவீனப்படுத்தித் தோற்கடிக்க அரசு மேற்கொண்ட முயற்சி ஆகும். ஆனால், இது தமிழ் மக்களுக்கு புரியாத விடயமும் அல்ல ஆகையினால், இது குறித்து தமிழ்மக்கள் எதிர்பார்த்த தொன்றுதான் என்றரீதியிலேயே செயற்படுகின்றனர்.

ஆனால், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் மாவட்டத்தில்நிலவும் மருந்துப் பற்றாக்குறை பற்றி வெளிவந்த பத்திரிகைச் செய்தி ஒன்று தமிழ் மக்களுக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அப்பத்திரிகைச் செய்தி யாழ். மாவட்டத்தில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு குறித்தும், தேவை குறித்தும்கொழும்பிற்குப் போதிய தகவல் வழங்கப்படுவதில்லை என்பதே ஆகும்.

அவ்வாறானல், யாழ். குடாநாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டிற்கு தனியாக சிங்கள அரசாங்கம் மட்டும் காரணமல்ல இங்குள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் காரணம் எனத் தெரிய வருகிறது இது மிகவும் வேதனை அளிக்கும் விடயமாகும். அதேவேளை, அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலை வெளிக்காட்டும் அம்சமுமாகும்.

சிலவேளை, இங்குள்ள அரசாங்க அதிகாரிகள் நாங்கள், இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கான மருந்து தேவைகளின் அளவைக் கொழும்பிற்கு அறிவித்திருந்தோம், அரசாங்கம் தரவில்லை ஆகையினால், அண்மைக்காலத்தில் நாங்கள் கோருவதை விட்டு விட்டோம் எனக் கூறமுற்படலாம். ஆனால், அது ஏற்புடையதொன்றல்ல. சிங்கள அரசாங்கம் தமிழ்மக்களுக்கு எதைத் தரவுள்ளது, எந்தளவு தரவுள்ளது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை அவர்களே மேற்கொள்ளட்டும். இங்குள்ளவர்கள் அதை தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், எவ்வளவு தேவைஎனக் கோரவேண்டியதும் அதை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முற்படுவதும் இங்குள்ள அதிகாரிகளின் கடமை.

அவ்வாறு இல்லாமல், தேவையானவற்றைக் கோராமல் விடுவதும், பெறுவதற்கு முயற்சி எடுக்காமல் இருப்பதும் ஒருவகையில் சிறிலங்கா அரசிற்கு துணைபோகும் நடவடிக்கையாகவே அமையும். இது சிங்கள அரசின் மீதான விசுவாசத்தினாலும் இருக்கலாம், அல்லது தமது பொறுப்புக்களில் உள்ள அக்கறையீனமாகவும் இருக்கலாம். ஆனால் இதில் எதுவாயினும் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கொண்டதிலிருந்து ஆரம்பமாகின. வேலைப்பளு நாளாந்தம் அதிகரித்து வரும் அதே சமயம் வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த ஊதிய அடிப்படையிலேயே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இதனால் வேலை நாட் குறைப்பு என்பது அடிப்படையில் சம்பளக் குறைப்பு ஆகிறது அத்துடன் முன்பு தொழிலாளர்கள் தமது பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்துடன் நேரில் சென்று பேசும் வாய்ப்பு இருந்தது ஆனால் தனியார் கம்பனிகள் பொறுப்பேற்றுக் கொண்டது முதல் அந்த வாய்ப்பும் இல்லாது போய் விட்டது மேலதிகவேலையில் ஈடுபடுவதற்கு எமக்கு நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படும் கணிசமான அளவை தனியார் நிர்வாகங்கள் வெட்டிக் குறைத்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர். தனியார்நிர்வாகங்கள் எதுவும் எமது குரலுக்கு செவி சாய்க்காமல் இருக்கும் அதே சமயம், வேலையில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் எந்த எதிர்ப்புக்காட்டாமல் தொடர்ந்து தங்களுடன் வரவேண்டும் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

வேலைக்கு செல்வதில் ஒரு நிமிடம் தாமதம் ஏற்பட்டாலும் கூட வேலை மறுக்கப்படுகிறது அதாவது சம்பளம் வெட்டப்படுகிறது. தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் தமது இழந்துபோன உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராடுவதற்கு அவர்கள் தயாராகியுள்ளனர்.

தொழிலாளர் சங்கம் என்பன மிகக் குறுகிய கண்ணோட்டத்துடன் அரசாங்கத்துடன் இசைந்து போய்விட்டதாக பெருமளவிலான தொழிற்சங்கவாதிகள் கூறுகிறார்கள். மண்டமைத் தனமான இந்த முடிவை மேற்கொண்டதின் மூலம் இ. தொ. காவும் எல். ஜே. ஈ. டபிள்யூ வும் தமக்குத துரோகம் செய்து விட்டதாக தோட்டத் தொழிலாளர்களில் பலரும் கருதுகின்றனர்.

1972ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கம்பனிகளினதும், பெரும் முதலாளிகளினதும் பொறுப்பிலிருந்த பெருந் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவது என்ற பெயரில் அரசுடைமையாக்கப்பட்டபோது எழுந்த நெருக்கடியைப் போல இன்றும் அதை த்தப்பட்ட பேச்சுக்களின் போது பெருமளவு வாக்குறுதிகளை அள்ளி வீசிய கம்பனி நிர்வாகங்களால் இ.தொ.கா ஏமாற்றப்பட்டு விட்டது இ. தொ.காவிற்கு இலகுவாக மடைப்பட்டம் கட்டிவிட அவர்களால் முடிந்துள்ளது என்று தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி. வி. கந்தையா குறிப்பிடுகின்றார். தோட்டங்களின் நிர்வாகம் மட்டுமே தனியார் கம்பனிகளிடம் கொடுக்கப்படும் லயன் அறைகளில் குடியிருக்கும் தொழிலாளரின் நல வாழ்வுகளில் அவை தலையிடாது என்று கூறப்பட்டதும் வெறும் உறுதி மொழியாகவே இருந்து விடுமோ என்ற அச்சம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது இத்தகைய போக்கின் விளைவாக இ.தொ.கா ... கந்தையா தெளிவுபடுத்துகிறார்.

எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் மட்டுமல்ல எல். ஜே. ஈ. டபிள்யூவின் உதவிப் பொதுச் செயலாளரான வீ. புத்திரசிகாமணி போன்றோர் கூட தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் விடப்பட்டதை வன்மையாக எதிர்க்கின்றார்கள்.

இன்றைய நிலைமையானது மலையக இளைஞர்கள் மத்தியில் வெறுப்பையும், விரக்தியையும் தூண்டி வளர்க்க ஏதுவாக இருப்பதாகவும், இதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்குமெனவும் எச்சரிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. நன்றி: ஐலண்ட்

# எகிப்தில் பாரிய நில நடுக்கம் 340பேர் பலி;4000 பேர் காயம்

[கெய்ரோ]

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தினால் குறைந்தது 340பேர் உயிர் இழந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான்காயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்றும் றிஸ்ரா அளவுகோலில் 5.9 என இந்த நில நடுக்கம் பதிவாகியுள்ளதாகவும் ஒரு நிமிடத்திற்குள் இச் சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப்பணிகள் இடைவிடாது நடைபெற்று வருவதாக எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேநேரம் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

எகிப்திய ஜனாதிபதி முபாரக் தனது சீன விஜயத்தை இடையில் நிறுத்திக்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வாதிகார அபாயம் பற்றி கொர்பசேவ் எச்சரிக்கை

(பாரிஸ்)

"நான் கைது செய்யப்படுவது குறித்து அஞ்சவில்லை. ரஷ்ய அரசாங்கம் அவ்வளவு தூரம் மதிகெட்டுப் போகும் என நான் கருதவில்லை. அப்படி அந்த நிலைமை ஏற்படுமானால் அது ரஷ்யாவுக்கு மிகவும் பாரதூரமானதாக இருக்கும். அப்போது கொர்பசேவின் கஷ்டங்கள் சிறிதாகத் தோன்றும் ஏனெனில் சர்வாதிகாரம் தொடருவதே முக்கியமாக இருக்கும்" என கொர்பசேவ் பிரெஞ்சு டி. எம். ஐ டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கொர்பசேவ் பவுண்டேஷனில் எடுக்கப்பட்ட இப்பேட்டியில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் ரஷ்யாவில் புதிய உயர் அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியதுடன் சர்வாதிகார அபாயம் குறித்தும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் புதிய கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும். புதிய குழு ஒன்றை அமைக்க வேண்டும். நாட்டின் வீழ்ச்சியைத் தடுக்கப் புதிய சூத்திரம் ஒன்றை வகுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

சட்ட பூர்வமான நிதி அடிப்படையில் உயர் அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி யெல்ட்ஸினின் விருப்பத்திற்கு ஏற்றமுறையில் அல்லாமல் ரஷ்யாவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களைக் கொண்டு அமைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக உங்களைப் பற்றி நீங்கள் குறிப்பிடுகிறீர்களா? என நிருபர் கேட்டபோது அதை ரஷ்யாவே தீர்மானிக்கவேண்டும். நான்பதவி எதையும் நாடிச் செல்லவில்லை என்றார் கொர்பசேவ்.

## வெள்ளத்தினால் 7 பேர் பலி

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி ஏழு பேர் வரை உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பெனாசிரின் கணவர் விடுதலை

(கராச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் பெனாசீர் பூட்டோவின் கணவரான அஸிப் அலிஸர்தாரி மீது சுமத்தப்பட்டிருந்த ஒரு கொலைச் சதிக்குற்றச்சாட்டு நிருபிக்கப்படாததினால் அவர் குற்றவாளி அல்ல எனக் கூறி பாகிஸ்தான் நீதிமன்றமொன்று அவரை விடுதலை செய்தது.

29 பேரை கொலை செய்வதற்கு இவர் திட்டம் வகுத்துக் கொடுத்தார் எனக் கூறி 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸ்தாரி கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது வேறு பல வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. இதுவரை விசாரனை செய்யப்பட்ட வழக்குகளில் இவர் விடுதலையான ஐந்தாவது வழக்கு இதுவாகும். இவர் மீது பத்துக்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றுள் இந்தக் கொலைச் சதி வழக்கே மிகப் பெரிய வழக்காகக் கருதப்பட்டது.

## பிரிட்டன் வர்த்தகக் குழு கொழும்பு வரும்

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள வெஸ்டர் ஷயர் வர்த்தக சம்மேளனத் தூதுக்குழு அடுத்தமாதம் முதல் தேதி கொழும்புக்கு வரவுள்ளது ஒருவாரகாலம் இத்தூதுக்குழுசிறிலங்காவில் தங்கியிருக்கும்.

1985க்குப்பின் கொழும்பு வரும் முதலாவது பிரிட்டிஷ் வர்த்தகத் தூதுக்குழு இது வாகும்.

வெஸ்டர் ஷயர் பிரிட்டனில் பாரிய அளவிலான வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ளது, பாதரட்சைகள், இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்கள் அடங்கிய பலரக உற்பத்திகளில் இது ஈடுபட்டுள்ளது.

## ஐ. நா. சபை உத்தரவு மீறல்; யுத்த விமானங்கள் பறந்தன

(சரஜேவோ)

ஐ நா. பாதுகாப்புச் சபை கடந்த வெள்ளிக்கிழமை விமானங்கள் பொஸ்னிய ஆகாயப் பிரதேசத்தில் பறக்க முடியாதென தடையுத்தரவு பிறப்பித்த போதும் இவ் உத்தரவை மீறி யுத்த விமானங்கள் பொஸ்னியா ஆகாயப் பிரதேசத்தில்பறந்ததாக அறிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் வாழும் பகுதியான கிராடாகாக் நகரின் ஆகாயப் பிரதேசத்தில் செர்பிய விமானங்கள் பறந்து பயங்கரத் தாக்குதலை நடாத்தியதாக அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பொஸ்னிய வானொலி தெரிவித்தது.

ஷெல்தாக்குதல்களின்விளைவாக பல சிறுவர்கள் பலியாகியதாகவும் நகரம் முற்றாக தரைமட்டமாகி இருப்பதாகவும் தொடர்ந்து எரிந்து கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொஸ்னியாவில் உள்ள செர்பிய இராணுவம் தாக்குதல் குறித்து அவசரமாக மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுஇராணுவ ஊடுருவல் ஒன்றுக்கு வழிகோலும் விதத்தில் செர்பிய விமானப் படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாக இராணுவ அறிக்கை ஒன்று தெரிவித்தது.

விமானங்கள் பறக்கும் சத்தம் கேட்டபோதிலும் விமானங்கள் எதையும் காண வில்லை என வட பொஸ்னியாவிலுள்ள பத்திரிகையாளர் தெரிவித்தார்.

## கொலையாளிகள் கைதாவர்?

(டில்லி)

குஜராத் மாநில பிரதேச காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ராவ் வலியுல்லா கொல்லப்பட்டமை தொடர்பாக புலன் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருப்பதாகவும், குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படலாம் என்றும் மாநிலப் பொலிசார் கூறியுள்ளனர் மாநில முதல்வர் சிமன் பாய் பட்டேல் இக்கொலை தொடர்பாக ஆழ்ந்த அனுதாபமும் அதிர்ச்சியும் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்

# ஈழநாதம்

## பெலவத்த தடுப்பு முகாமிலிருந்து
# தப்பி ஓடிய 10 தீவிரவாதிகள் ஜே.வி.பிக்கு புத்துயிர் கொடுக்கலாம்

-பொலிஸ் வட்டாரங்கள் அச்சம்

அண்மையில் பெலவத்த தடுப்பு முகாமில் இருந்து தப்பிச் சென்ற பத்து ஜே. வி. பி சந்தேக நபர்களும் காடுகளில் உள்ள அவர்களின் மறைவிடங்களில் தங்கியிருக்கிறார்கள் என பொலிஸ் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பத்து நபர்களும் ஜே வி பியின் இராணுவப் பிரிவான டி. ஜே வியின் தீவிரமான உறுப்பினர்கள் அவர்கள் ஒவ்வொருவரும் கொலைகள் உட்பட பல தீவிரமான இரகசிய சதி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாவர். அதே சமயம் தமது வழமையான தோற்றத்தில் இனி வெளிப்பட மாட்டார்கள் எனவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

பெலவத்த தடுப்பு முகாமில் இருந்து ஜே. வி. பியினர் தப்பிச் சென்றதானது, புதிய இளம் தலைமை ஒன்றின் கீழ் அவர்கள் மீள எழுச்சி பெறலாம் என்பதை உறுதி செய்வதாகவே உள்ளது.

இந்த தப்பிச் சென்ற ஜே.வி. பியினர் 80களின் பிற்பட்ட நாட்களில் பிரதேச தலைவர்களாக இருந்தவர்கள் என நம்பப்படுகிறது. எதிர் காலத்தில் உருவாகக் கூடிய ஜே வி.பியின் புதிய தலைமையில் இவர்களினால் முக்கிய பாத்திரங்களை சுலபமாக வகிக்க முடியும்.

அதே சமயம் நாட்டின் பெரும் பாலான பகுதிகளின் காடுகளில் ஜே. வி. பியினர் இன்னமும் மறைவிடங்களை வைத்திருக்கின்றார்கள் எனத் தெரியவருகிறது.

குறிப்பிடத் தக்களவு தானியங்கி, மற்றும் இலகு இயந்திரத் துப்பாக்கிகளை அவர்கள் இன்னமும் வைத்திருக்கின்றார்கள். இவற்றுள் பெரும்பாலானவை அவர்களின் எழுச்சிக் காலத்தில் பொலிஸ், மற்றும் இராணுவ முகாம்களில் இருந்து கைப்பற்றிக் கொண்டு செல்லப்பட்டவைகளாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பெலவத்த முகாமில் இருந்து 10 ஜே. வி. பி. சந்தேக நபர்களும் செப்டெம்பர் மாதத்தின் இறுதி நாட்களில் சுரங்கம் ஒன்றினூடாக தப்பிச் சென்றார்கள். இச் சுரங்கத்தை பல மாதங்கள் முயன்று இரகசியமாக அவர்கள் அமைத்திருந்தார்கள். இந்த தப்பிச் செல்லுதல் சம்பவமானது நான்கு மாத காலத்தினுள் நிகழ்ந்த இரண்டாவது சம்பவமாகும். முதல் தடவை இதே தடுப்பு முகாமில் இருந்து தப்பிச் சென்ற 5ஜே.வி.பி. சந்தேகநபர்களும் திரும்பவும் கைதுசெய்யப்பட்டார்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

## காரணமின்றி தடுத்து வைத்தமைக்காக
# நஷ்ட ஈடு 18,000 வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு

[கொழும்பு]

காரணமின்றி 89 ஆம் ஆண்டு முதல் பல்லேகல இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கேகாலையைச் சேர்ந்த கல்பிட்டிகலகாமினிரண சிங்காவுக்கு நஷ்ட ஈடாக 18,000 ரூபாவினை வழங்க உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரணசிங்க சார்பில் இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்திருந்தது.

மனுதாரர்சார்பில் ஆஜரான சங்க சட்ட உதவி நிலையத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் ''சட்டவிரோதமாக கடந்த மூன்று வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டதுமனித உரிமை மீறலுக்கு உட்பட்டதாகும்'' எனத்தெரிவித்தனர்

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டமா அதிபரின் பிரதிநிதி இந்த வழக்கை எதிர்த்து வாதிட முடியாமல் இருப்பதாகவும் மனுதாரரை கைது செய்தது யார் என்று தெரியவில்லை என்றும் காரணம் இன்றி தடுத்து வைத்ததை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் கடந்த 7-8-92 இல் மனுதாரரை தடுப்பு முகாமில் இருந்து விடுவித்து விட்டதாகவும் தெரிவித்தார்

இதனையடுத்து உயர்நீதி மன்ற நீதியரசர்கள் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

## திறந்த பல்கலை
# பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின்கல்வி டிப்புளோமா பகுதி இரண்டுக்கான பரீட்சைகள் வரும் இருபத்தி நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளன வடபகுதியிலிருந்து யாழ் பிராந்தியநிலையத்தில் கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான பரீட்சைகள் கொக்குவிலிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன இதற்கான அனுமதி அட்டைகள் உட்பட பரீட்சை சம்பந்த

## புகைப்பட கலைஞர்களுக்கோர்
# நற்செய்தி!

யாழ். றோட்டரக்ற் கழகம் ஓர் புகைப்படக் கண்

## செயற்குழு உறுப்பினராக சந்திரிகா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பணமாக ஆசிரியர் சம்பளம்

ஐப்பசி மாத ஆசிரியர்கள் சம்பளம் பணமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக பாடசாலை அதிபர்களை, இலங்கை வங்கி யாழ் மேற்தரக் கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளார்கள்.

## இன்றைய உதைபந்தாட்டங்கள்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இன்றைய போட்டிகளின் விபரம்: மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மைதானத்தில் மாலை 3-00மணிக்கு 17வயது பிரிவில் மட்டுவில் சந்திரபுர எதிர் புங்குடுதீவு மகாவித்தியாலயம் 4-00 மணிக்கு 19 வயது பிரிவில் வரணி மகா வித்தியாலயம் எதிர் புங்குடு தீவு மகாவித்தியாலயம்.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயது பிரிவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க எதிர் உரும்பராய் இந்து. 4-00 மணிக்கு 17வயது பிரிவில் புனித சார்ள்ஸ் எதிர் அருணோதயா.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17வயது பிரிவில் அச்சுவேலி மகாவித்தியாலயம் எதிர் கரவெட்டி விக்னேஸ்வரா. 4-00 மணிக்கு 17 வயது பிரிவில் சாவகச்சேரி இந்து எதிர் ஹாட்லி

# இந்தியா மீது சந்தேகம்? அந்தயுகம் கழிந்துவிட்டது

- பிரேமதாசா

இலங்கை இந்தியாவைப் பற்றி சந்தேகித்த காலம் மலையேறி விட்டது என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்தளத்தில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

அண்மையில் தான் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது இலங்கை இந்தியா மீது சந்தேகம் கொண்டுள்ளதாக வினாவப்பட்டதாகவும், ''அந்த யுகம் கழிந்துவிட்டதாக'' தாம் தெரிவித்ததாக

நரசிம்மராவ் பதவியேற்றபின்னர் பரஸ்பரம் புரிந்துணர்வோடு இந்தியாவும் இலங்கையும் செயல்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்

சட்டி

அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது, பல வீடுகளை உடைத்து தரைமட்டமாக்கியுள்ளனர், வீடுகளின் கூரைத் தகடுகள், மரங்கள் ஆகியவை படையினரால் கழற்றி எடுக்கப்பட்டுள்ளது. கூறையாடப்

## மன்னார் மாவட்டத்தில்
# லெப். கேணல் விக்டர் நினைவு எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பு

[நமது நிருபர்]

முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல்விக்டர் மற்றும் 2ஆம் லெப்டினன்ட் ரோம் ஆகியோரது ஆறாம் ஆண்டு நினைவு தினம் மன்னார் மாவட்ட மக்களால் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

முழங்காவில் பல்லவராயன் கட்டு மற்றும் சோலைக் கிராமங்கள் மஞ்சள், சிவப்புநிற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டன.

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற மேற்படி நிகழ்வின் போது அவ்வூர் மக்கள் பல விளையாட்டு நிகழ்ச்சிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தினர்.

அன்றையதினம் காலை 10 மணிக்கு பிரதேசப் பொறுப்பாளர் திரு. சவுந்தர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் நினைவுதின நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதுவரை தமிழீழ விடுதலைக்காக தம்முயிர் தந்த மாவீரர்களினதும், பொது மக்களினதும் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவீரன் தீபனின் தாயாரும் மாவீரன் லெப்டினன்ட் அறிவுடையானின் சகோதரனும் ஈகைச் சுடரேற்றி வைத்தனர். மன்னார் மாவட்டத் தளபதி அமுதன் மாவீரர்களான விக்டர் மற்றும் ரோம் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து போராளிகளும் பொதுமக்களும் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

வீரச்சாவடைந்த விக்டர், ரோம் ஆகியோரின் ஆறாம் ஆண்டு நினைவு தினமான கடந்த 12ஆம் திகதி முழங்காவில் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. இதில் நாச்சிக்குடா சென் ஜேம்ஸ் அணி வெற்றி பெற்றது.

### விக்டர் எழுச்சிக் கிராமம்

''விக்டர் எழுச்சிக் கிராம அங்குரார்ப்பண வைபவம் முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் விக்டர் வீரச்சாவடைந்த ஆறாம் ஆண்டான கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

முழங்காவில் பிரதேசத்தில் உள்ள பல்லவராஜன் கட்டு, சோலை என்னும் இடத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ''விக்டர்'' எழுச்சிக் கிராமம் உருவாக்கப்படவுள்ளது, இக் கிராமத்தில் 50 வீடுகள், விளையாட்டு மைதானம், சிறுவர் பாடசாலை, சிறுவர் பூங்கா ஆகியன அமைக்கப்படவுள்ளன.

பூநகரிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் சோலைக் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ்வாழும் மக்களுமாக 50 குடும்பங்களுக்கு 50 ஏக்கர் காணி வழங்கப்பட்டு இவ்வெழுச்சிக் கிராமத்தில் அவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இறுதி நினைவாக அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது, பல ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர், இக்கூட்டத்தில் முழங்காவில் பிரதேச பொறுப்பாளர் திரு சவுந்தர், முழங்காவில் பிரதேச மகளிர் முன்னணிப்

# 30 பூநகரி பொதுமக்கள் வேலணையில் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி வெட்டுக்காடு என்ற பகுதியைச் சேர்ந்த சுமார் முப்பது அப்பாவிப் பொது மக்கள் வேலணையில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பூநகரிப் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பொது மக்களைக் கைது செய்துள்ளனர். இப் பகுதிக்குள் இராணுவத்தினர் புகுந்த சமயம் இவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு தீவகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் தற்போது வேலணை மத்திய கல்லூரியில் உள்ள இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை இராணுவத்தினர் விடுதலை செய்ய அனுமதி வழங்கியுள்ளபோதிலும் தீவகத்தில் தங்கியிருக்கும் ஈ. பி டி. பி. இயக்கத்தினர் விடுதலை செய்வதை தடுத்துள்ளனர். சிறிலங்காப்படையினர் யாழ்ப்பாணம் முழுவதையும் பிடித்த பின்புதான் அவர்களை விடுதலை செய்ய முடியும் என்று கூறி தடுத்துள்ளனர், (க)

# கடற்படை ஒத்திகையில் பாகிஸ்தானுக்கு இடமில்லை

--இந்தியா அறிவிப்பு

(டில்லி)

ஆசிய நாடுகள் குழு ஒன்றுடன் அடுத்த வருடம் நடத்த இருக்கும் கடற்படைப் பயிற்சி ஒத்திகைகளுக்குப் பாகிஸ்தான் அழைக்கப்பட மாட்டாது என இந்திய கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், இந்தோனேஷியா, மலேசியா, சிறிலங்கா, மற்றும் நாடுகளின் கடற்படைகளுடன் இந்திய போர்க்கப்பல்கள் கடற்படைப் பயிற்சி, ஒத்திகைகளில் ஈடுபடுமென்றும் இந்தக் கடற்படை ஒத்திகைகளுக்குப் பாகிஸ்தான் அழைக்கப்பட மாட்டாது எனவும் வைஸ் அட்மிரல் எஸ் பி. கொலில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் இந்தியக் கடற்படை அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் கடற்படைப் பயிற்சி ஒத்திகைகளை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது

# 2 படை பலி

ஜே.வி. பியினர் 80களின் பிற்பட்ட நாட்களில் பிரதேச தலைவர்களாக இருந்தவர்கள் என நம்பப்படுகிறது. எதிர் காலத்தில் உருவாகக் கூடிய ஜே வி.பியின் புதிய தலைமையில் இவர்களினால் முக்கிய பாத்திரங்களை சுலபமாக வகிக்க முடியும்.

அதே சமயம் நாட்டின் பெரும் பாலான பகுதிகளின் காடுகளில் ஜே. வி. பியினர் இன்னமும் மறைவிடங்களை வைத்திருக்கின்றார்கள் எனத் தெரியவருகிறது.

குறிப்பிடத் தக்களவு தானியங்கி, மற்றும் இலகு இயந்தி

ரூபாவின்ன வழங்க உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரணசிங்க சார்பில் இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்திருந்தது.

மனுதாரர்சார்பில் ஆஜரான சங்க சட்ட உதவி நிலையத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் ''சட்டவிரோதமாக கடந்த மூன்று வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டது மனித உரிமை மீறலுக்கு உட்பட்டதாகும்'' எனத்தெரிவித்தனர்

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டமா அதிபரின் பிரதிநிதி இந்த வழக்கை


## புகைப்பட கலைஞர்களுக்கோர்

# நற்செய்தி!

யாழ். றோட்டரக்ற் கழகம் ஓர் புகைப்படக் கண்காட்சியை நடாத்தவுள்ளது. அதில் உங்களின் படைப்புக்கள் இடம்பெறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

படங்கள் தற்கால நிகழ்வுகளைச் சித்திரிப்பனவாயோ, இயற்கை எழில் நிறைந்தனவாயோ, புகைப்படக் கலை நுட்பத்தைப் பிரதிபலிப்பனவாயோ அமையலாம்.

சிறந்த படங்களுக்குப் பரிசில்கள் காத்துள்ளன,

படங்களை நீங்கள் ஒப்படைக்க வேண்டியது:

இடம்:- ''விமலம்''
நல்லூர், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(நாவலர் வீதியிலிருந்து 25 யார் தொலைவில்)

திகதி:- 17-10 92 (சனி)
18-10 92 (ஞாயிறு)

நேரம்;- காலை 9-00 - நண்பகல் 12 மணி வரை.

(உங்கள் படங்கள் மீண்டும் கவனமாக ஒப்படைக்கப்படுமென உறுதியளிக்கிறோம்)

(3464) செயலாளர்.


## மரண அறிவித்தல்

## அருட்சகோதரி மேரி யோசேப்பின்

மாதகலைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி யோசேப்பின் அமிர்தநாதர் 13-10-92 இல் காலமானார். அன்னார் அமிர்தநாதர், அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் பிரகாசநாதர், மேரி மலர் ரோசா (லீலி), மேரி அருள்பிரகாசி (கண்மணி) ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இன்று பி. ப. 3.30 மணிக்கு திருப்பலி பூசைஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. பிரகாசநாதர்

மாதகல். (3465)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


முகாமில் இருந்து விடுவித்து விட்டதாகவும் தெரிவித்தார்

இதனையடுத்து உயர்நீதி மன்ற நீதியரசர்கள் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

## திறந்த பல்கலை பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின்கல்வி டிப்புளோமா பகுதி இரண்டுக்கான பரீட்சைகள் வரும் இருபத்தி நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளன வடபகுதியிலிருந்து யாழ் பிராந்தியநிலையத்தில் கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான பரீட்சைகள் கொக்குவிலிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன இதற்கான அனுமதி அட்டைகள் உட்பட பரீட்சை சம்பந்தமான விபரங்கள் அடங்கிய தபால் பொதிகள் யாழ் பிராந்திய நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகஅறிவிக்கப் பட்டுள்ளது

யுத்த நிலைமை காரணமாக நீண்டகாலம் பரீட்சைக்கு தோற்றாமலிருந்த பல மாணவர்கள் இம்முறை பரீட்சைக்கு தோற்றக்கூடியதாகவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (20)

## திருகோணமலை

கோயில் காணிகளிலும் சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்படும் இதே சமயம் சமீபத்தில் பல்லின மக்கள் வீடமைப்புத் திட்டம் என்ற போர்வையின் கீழ் இடம்பெயர்ந்த தமிழரின் காணிகளில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப் படுகிறது. இங்கு தமிழ் மக்களுக்கு என ஒதுக்கப்பட்ட காணிகளில் இரகசியமாக சிங்களவர் குடியேற்றம் செய்யப் படுகின்றனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

சமீபத்தில் உப்புவெளி மூன்றாம்கட்டைப் பகுதியில் தமிழ் மக்களின் நூறு ஏக்கர் காணி சிறிலங்கா அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது என்றும் மட்கோ என்ற இடத்தில் பல ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கு முகமாக புதிய நெசவாலை ஒன்று அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கைக்கு சிங்கள அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றஅதேவேளை தமிழ் அதிகாரிகள் மௌனம் சாதிக்கின்றனராம்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி குடியேற்றம் செய்யப் பட்ட சிங்களக் குடும்பங்களுக்கு காணி உறுதி, காணி உத்தரவுப் பத்திரங்கள் உடனுக்குடன் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(தி), (24)

பிரிவில் அச்சுவேலி மகாவித்தியாலயம் எதிர் கரவெட்டி விக்னேஸ்வரா. 4-00 மணிக்கு 17 வயது பிரிவில் சாவகச்சேரி இந்து எதிர் ஹாட்லி

## இந்தியா மீது சந்தேகம்? அந்தயுகம் கழிந்துவிட்டது

- பிரேமதாசா

இலங்கை இந்தியாவைப் பற்றி சந்தேகித்த காலம் மலையேறி விட்டது என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்தளத்தில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

அண்மையில் தான் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது இலங்கை இந்தியா மீது சந்தேகம் கொண்டுள்ளதாக வினாவப்பட்டதாகவும், ''அந்த யுகம் கழிந்துவிட்டதாக'' தாம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பதவியேற்ற பின்னர் பரஸ்பரம் புரிந்துணர்வோடு இந்தியாவும் இலங்கையும் செயல்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்

## வடபகுதி

யிரத நிலையத்திற்கு வர முடியாமல் நண்பகல் புகைவண்டியில் பிரயாணம் செய்ய முடியாது அவதிப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

## மரண

திற்குச் செல்வதென்றாலும் படையினரிடம் அனுமதி பெறப்படவேண்டும். போக்குவரத்துவசதிகள் எதுவும் இல்லை

பெயரளவுக்கு மட்டும் ஊர் காவற்துறையில் வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மருத்துவர்கள் எவரும் இல்லை.

தீவகத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் உள்ள பெறுமதிவாய்ந்த பொருள்கள் அனைத்தையும் படையினர் கொள்ளைஅடித்துச் சென்றுள்ளனர் பலவீடுகள்படையினரால் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் தரப்பில் ஊர் காவற்துறையில் சுமார் 100 பேரும், வேலணையில் சுமார் 215 பேரும், புங்குடுதீவில் சுமார் 750 பேரும் உள்ளனர். இவர்களில் அனேகமானவர்கள் வயோதிபர்கள் இவர்களுக்கு உதவி ஆட்கள் எவரும் இன்றி நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு ஏற் படும் நோய் காரணமாக பலர் மரணமடைந்துள்ளனர்

மண்டைதீவில் சுமார் 45 பொது மக்கள் ஆரம்பத்தில் இருந்தனர் இவர்களில் நோய்காரணமாக சுமார் 23 பேர் மரணமடைந்துள்ளனர். மேலும்பலர் நோய் ஏற்பட்டு அவதியுறுகின்றனர் என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

(க], (பா)

## 3200

யிலான மாவை ஏற்றி வரும் என அரச அதிபர் தெரிவித்தார். (பா)

டன் அடுத்த வருடம் நடத்த இருக்கும் கடற்படைப் பயிற்சி ஒத்திகைகளுக்குப் பாகிஸ் தான் அழைக்கப்பட மாட்டாது என இந்திய கடற்படை

## சட்டி

அனைத்தும் எடுத்துச் செல்லப் பட்டுவிட்டது, பல வீடுகளை உடைத்து தரைமட்டமாக்கியுள்ளனர், வீடுகளின் கூரைத் தகடுகள், மரங்கள் ஆகியவை படையினரால் கழற்றி எடுக் கப்பட்டுள்ளது, சூறையாடப் பட்ட பொது மக்களின் பொருள்கள் பொதிகளாக்கப் பட்டு தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காக கப்பல்களில் ஏற்றப்படுவதை தான் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்,

இப்பகுதிகளில் தங்கியிருக் கும் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருத்துவசதிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை, இதனால் பலர் கடும் நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்,

மேற்படி பகுதிக்குள் இராணுவத்தினர் புகுந்ததும் பலரை சுட்டுக் கொலை செய்தனர்,

இளவாலை மக்குவில் என்ற இடத்தில் மட்டும் ஐந்து பேர் இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இப்படிக் கொலை செய்யப்பட்டவர் களது சடலங்களை அப்பகுதியில் உள்ள கிணறுகளில் படையினர் போட்டுள்ளனர். இதனால் இப்பகுதிகளில் இன்னமும் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது என்றும் அவ்வயோதிபர் தெரிவித்தார். (க) (பா)

## குமண

பகுதி நோக்கி அடுத்த வாரம் புறப்பட உள்ளது

சுமார் 850 மெற்றிக்தொன் சீனி, 10 மெற்றிக்தொன் பருப்பு, 5 மெற்றிக்தொன் தீப்பெட்டி ஆகிய பொருள்கள் உட்பட மேலும் சில அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் தபால் பொதிகள் ஆகியவற்றையும் இக்கப்பல் எடுத்து வருகிறது (க)

## குமாரியில்

தரித்து நின்ற மேற்படி கப்பலில் சுமார் 200 மெற்றிக் தொன் அரிசி மட்டும் ஏற்றப் பட்டது இதன்பின்னர் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் திடீரென தலைமறைவாகிவிட்டார். இவரைத் தேடிப் பிடிக்கும் முயற்சிகள் நேற்றுவரை தொடர்ந்து கொண்டிருந்தது. (க)

தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், இந்தோனேஷியா, மலேசியா, சிறிலங்கா, மற்றும் நாடுகளின் கடற்படைகளுடன் இந்திய போர்க்கப்பல்கள் கடற்படைப் பயிற்சி, ஒத்திகைகளில் ஈடுபடுமென்றும் இந்தக் கடற்படை ஒத்திகைகளுக்குப் பாகிஸ்தான் அழைக்கப்பட மாட்டாது எனவும் வைஸ் அட்மிரல் எஸ் பி. கொலில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் இந்தியக் கடற்படை அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் கடற்படைப் பயிற்சி ஒத்திகைகளை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது

## 2 படை பலி

வவுனியாவின் வடபகுதியில் படையினர் சென்ற வாகனம் பள்ளத்தில் வீழ்ந்ததினால் இரண்டு இராணுவத்தினர் பலியானதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

## ''நங்கூரம்'' இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'நங்கூரம்' சமூக அறிவியல் ஏட்டின் வெளியீட்டு நிகழ்ச்சி இன்று பி ப. 3-15 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உருவாக்கப்படவுள்ளது, இக் கிராமத்தில் 50 வீடுகள், விளையாட்டு மைதானம், சிறுவர் பாடசாலை, சிறுவர் பூங்கா ஆகியன அமைக்கப் படவுள்ளன.

பூநகரிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் சோலைக் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ்வாழும் மக்களுமாக 50 குடும்பங்களுக்கு 50 ஏக்கர் காணி வழங்கப்பட்டு இவ்வெழுச்சிக் கிராமத்தில் அவர்கள் குடியமர்த் தப்படவுள்ளனர்.

இறுதி நினைவாக அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது, பல ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர், இக்கூட்டத்தில் முழங்காவில் பிரதேச பொறுப்பாளர் திரு சவுந்தர், முழங்காவில் பிரதேச மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி முத்து நகை உட்பட பல பிரமுகர்களும் உரையாற்றினர்,

## உன்னிச்சை

ஆயுதம் தாங்கிய காடையர் கூட்டம் ஒன்று புகுந்து அங்குள்ள மக்களைத் தாக்கிவிட்டு அவர்களைப் பயமுறுத்திப் பெறுமதி வாய்ந்த பல பொருள்களையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர். இவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும் பறித்துச் சென்றுள்ளனர்.


## மரக்கன்றுகள் விற்பனைக்கு

மலைவேம்பு, இலுப்பை, வேம்பு, முதிரை, கடுக்காய் ஆகிய வனவளர்ப்புத் தாவரக் கன்றுகள் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உள்ளன. வாங்க விரும்புபவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(3466)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 13-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6096

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

24-9416, 42-1325, 40-7207, 28-6996, 24-6437, 42-6488, 42-9625, 27-1531, 26-2502, 26-6062, 27-4070, 28-657, 26-6320

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

24-9676, 24-6243, 24-5734, 40-2829, 27-1187, 41-9167, 42-0266, 26-1791, 24-8429, 26-1098, 41-4718, 24-6480, 26-5782, 41-8629, 28-6020, 26-0375, 28-854, 24-5393, 26-4792, 42-3924